**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No. 130/2015**

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. V. பாண்டியன், Bench Clerk (Gr–III) – I/C அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 27.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சண்முகம் (DW–1) | வயது | : | 70/2025 |
| க/த பெயர் | : | திரு. பக்கிரிசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) பி.சா.ஆ.16 ஆவணமான செய்திதாள் பொது அறிவிப்பில் யாரிடமிருந்து எந்த தேதியில் கிரயம் வாங்கப்பட்ட ஆவணம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். யாரிடமிருந்து கிரயம் வாங்கப்பட்டது என்ற விபரமும் கிரய ஆவணத்தின் எண்ணும் குறிப்பிட்டு பொது அறிவிப்பு கொடுக்காததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.16 செய்தித்தாள் அறிவிப்பில் பொது அறிவிப்பு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பதில் அறிவிப்பு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டதால்தான் பி.சா.ஆ.16 ஆவணத்தில் தாவா சொத்தில் சர்வே எண்ணையும் ஆவண எண்ணையும் குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் என்றால் சரியல்ல.
2) பி.சா.ஆ.15 ஆவணம் எதற்காக இந்த வழக்கில் குறியீடு செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தை ஸ்தல ஆய்வு செய்து முத்திரை தாள் கட்டணம் கட்ட வேண்டும் என அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ஆவணம் என்பதால் தாக்கல் செய்துள்ளேன். வாதிக்கு சொந்தமான தாவா சொத்தின் மதிப்பு தெரியாததால் நானும் குத்புதினும் மோசடியாக பி.சா.ஆ.15 ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன்.
3) தாவா சொத்து தொடர்பாக வில்லங்க சான்றிதழை எடுத்து பார்த்திருந்தால் வாதியின் சொத்து என்பது தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி மீது ரூபாய் 2 லட்சம் வேண்டி மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த OS.No.385/2015 வழக்கானது எனக்கு எதிராக தள்ளுபடி

செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் வாதியின் கையெழுத்தை நான் மோசடியாக போட்டு ஆவணத்தை உற்பத்தி செய்ததாக சொல்லி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.16 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் மோசடியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் தான் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4) தாவா சொத்திற்கு உரிமையில்லாத நானும் குத்புதினும் சேர்ந்து சத்யநாராயணன் பெயருக்கு கிரய ஆவணம் எழுதி கொடுத்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. குத்புதினுக்கும் பவர் ஏஜெண்டாக நான்தான் செயல்பட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான உரிமை மூல ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் ஷேக் முகமது உயில் ஆவணம் எழுதி வைத்ததை பார்த்தேன். உயில் ஆவணம் எழுதி வைத்தவருக்கு அந்த சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உயில் ஆவணத்தை தவிர வேறு ஏதேனும் ஆவணத்தை பார்த்தேனா என்றால் நகர அளவு பதிவேட்டை பார்த்தேன்.

5) உரிமை மூல ஆவணம் இல்லாமல் 2ம் பிரதிவாதியானவர், 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த அடமான கடன் ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல மற்றும் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து அடமான தொகையை திரும்ப செலுத்தி விட்டனா என்றால் ரூபாய்.20 லட்சத்தை செலுத்தி விட்டேன். நான் எந்த தொகையும் செலுத்தாமல் செலுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.28 12:57:41 +0530

District Munsif
Mannargudi.